

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.12.2023) தலைமைச் செயலகத்தில், எம்.ஆர்.எப். நிறுவனத்தின் துணைத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அருண் மேமன், நிர்வாக இயக்குநர் ராகுல் மேமன் மாப்பிள்ளை ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினர். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.12.2023) தலைமைச் செயலகத்தில், டால்மியா குழுமத்தின் தலைவர் மற்றும் செயல் இயக்குநர் அர்மித் சிங் சேத்தி சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, டால்மியா குழுமத்தின் செயல் இயக்குநர் கே.விநாயகமூர்த்தி, கே.இராமநாதன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.12.2023) தலைமைச் செயலகத்தில், மகேந்திரா ஆராய்ச்சி கூடத்தின் (Mahendra Research Valley) தலைவர் வேலுசாமி சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, மகேந்திரா ஆராய்ச்சி கூடத்தின் துணைத் தலைவர்கள் மதன்ராஜ் மற்றும் சக்திவேலன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.12.2023) தலைமைச் செயலகத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், மத்தியக் குழு உறுப்பினர் பி. சம்பத், மாநில செயற்குழு உறுப்பினர் கே. சாமுவேல்ராஜ் ஆகியோர் சந்தித்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.12.2023) தலைமைச் செயலகத்தில், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கொங்கு ஈஸ்வரன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் நிர்வாகிகள் டி.கே.எஸ். ரமேஷ், நித்யானந்தம், அசோகன், இசை பாலு, ஜெ.கே.மூர்த்தி, விவேகானந்தன், ரமேஷ் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் அமிர்தகுமார் நிர்வாகிகளுடன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சங்க உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

# பயன் தூக்கார் செய்த உதவிக்கு அன்பை விட நன்றியேது?

## தூய்மைப் பணியாளருக்கு ஊக்கத்தொகை வழங்கி - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, டிச. 14-**

**மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குப்பைகளை அகற்றிட களம் கண்ட 3449 தூய்மைப் பணியாளர்கள்உள்ளிட்டபிறபணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கியது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில், "பயன் தூக்கார் செய்த உதவிக்கு அன்பை விட நன்றியேது?" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

கண்ணுக்கு ஒரு இடர் என்றால் நொடிப்பொழுதில் காக்க வரும் கை போல, தலைநகர் சென்னையிலும், புறநகர் மாவட்டங்களிலும் மிக்ஜாம் புயல் பாதிப்பைப் போக்கக் களம் கண்ட 3449 தூய்மைப் பணியாளர்கள்உள்ளிட்டபிறபணியாளர்களுக்கு 4000 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கினேன்.

பயன்தூக்கார் செய்த உதவிக்கு அன்பைவிட நன்றியேது?

இவ்வாறு அவர் தனது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# மாநிலங்களுக்குப் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்துவதாக ஒன்றிய அரசு மீது வழக்கு!

## உச்சநீதிமன்றத்தில் கேரள அரசு தொடர்ந்தது!

புதுடெல்லி, டிச.14-

மாநிலங்களுக்கு பொருளாதார நெருக்கடியை ஒன்றிய அரசு ஏற்படுத்தி வருவதாக குற்றம்சாட்டி, கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது.

ஒன்றிய அரசு உரிய நேரத்தில் நிதி பகிர்வை வழங்காதது, கடன் வாங்க அனுமதிக்காதது உள்ளிட்ட காரணங்களால் நிதி நெருக்கடியை சந்தித்து வருவதாக கேரள அரசு தெரிவித்து வந்தது. இந்நிலையில், ஒன்றிய அரசுக்கு எதிராக கேரள அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அந்த வழக்கில், மாநில சுயாட்சிக்கு எதிராக ஒன்றிய அரசு பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வருவதாகவும், ஒன்றிய அரசின் செயல், மாநில சுயாட்சி உரிமைக்கு எதிரானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இல்லாத காரணங்களைக் கூறி கடன் வாங்குவது உள்ளிட்ட விவகாரங்களில் மாநிலங்களுக்கு பல்வேறு தடைகளை ஒன்றிய அரசு ஏற்படுத்தி வருவதாகவும், இதன் காரணமாக நிதி நெருக்கடி அதிகரித்து வருவதாகவும் கேரள அரசு குற்றம்சாட்டியுள்ளது.

நிதிபகிர்வு விவகாரத்தில் கூட்டாட்சியை ஒன்றிய அரசு படிப்படியாக சிதைத்து வருவதாகவும், தனது மனுவில் கேரள அரசு கூறியுள்ளது. இதனிடையே, கேரள அரசுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்க உடனடியாக 26 ஆயிரம் கோடி ரூபாய் நிதி திரட்ட அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இல்லாவிட்டால் கேரள அரசு கடும் நிதி நெருக்கடிக்குள் தள்ளப்படும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

அரசியல் சாசனப் பிரிவு 131யைப் பயன்படுத்தி இந்த மனுவை உச்சநீதிமன்றத்தில் கேரள அரசு தாக்கல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.